தினமலர்
உண்மையின் உரைகல்

## சர்வதேச உணவு பாதுகாப்பு நிதியில் மாம்பழங்களை பாதுகாக்கும் திட்டம்

கோவை : கனடா நாட்டின் சர்வதேச உணவு பாதுகாப்பு ஆராய்ச்சி நிதியில் இருந்து தெற்கு ஆசியாவில் மாம்பழங்களை கெடாமல் பாதுகாக்கும் திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் 70 சதவீத மாம்பழம் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இருந்தும் இங்குள்ள வெப்பநிலை சமாளிக்க போதிய குளிர்சாதன கட்டமைப்புகள் மற்றும் அறுவடைக்கு பின் செய்யும் தொழில்நுட்ப பாதுகாப்புகள் இல்லாத காரணத்தால் 30 முதல் 35 சதவீத மாம்பழங்கள் வீணாகிறது.இதனால், பெரும் பொருளாதார இழப்பு ஏற்பாடுகிறது. அறுவடைக்கு பின் காய்கறி மற்றும் பழங்களில் ஏற்படும் இழப்பு ஆண்டுக்கு இரண்டு லட்சம் கோடி என, கணக்கிடப்பட்டுள்ளது. இந்த இழப்பை தடுக்க கனடா நாட்டின் ஆராய்ச்சி நிறுவனம் முன் வந்துள்ளது.

பன்னாட்டு ஆராய்ச்சி நிறுவனமும், கன்னடா நாட்டு அரசும் இணைந்து தெற்கு ஆசியாவில் மாம்பழங்களை கெடாமல் பாதுகாத்தல் என்ற ஆராய்ச்சி திட்டத்தினை துவக்கியுள்ளது.இத்திட்டத்தை செயல்படுத்த சர்வதேச உணவு பாதுகாப்பு நிதியின் கீழ் 15.5 கோடி ரூபாய் நிதியை, வேளாண் பல்கலைக்கழகம், கன்னடாவில் உள்ள 'கல்ப்' பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றுக்கு அளித்துள்ளது.இத்திட்டத்தின் நோக்கம், அறுவடைக்கு பின் ஏற்படும் இழப்பீட்டை தவிர்த்து மாம்பழத்தின் தரத்தினை உயர்த்துவதாகும்.கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் செர்ரி,பிளம்ஸ் மற்றும் பீச் போன்ற பழங்களை பாதுகாக்கும் வைப்புத்திறன் ஆராய்ச்சிகள் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.மேலும் 'எக்சனல்' தொழில் நுட்பத்தின் மூலம் நீலம், பெங்களூரா, அல்போன்சா, பங்கனம்பள்ளி, மற்றும் இமாம்பசந்த் ஆகிய ரகங்களை பாதுகாக்கும் திட்டம் தேனி, கிருஷ்ணகிரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் நடைமுறையில் உள்ளது.

இந்த தொழில்நுட்பத்தின் மூலம் மாம்பழத்தின் வாழ்நாள் அதிகரிப்பதோடு பறவைக்கண் நோய் மற்றும் நுனித்தண்டு அழுகல் நோய் தாக்கம் குறைந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் சமீபத்தில் இயற்கை வள மேலாண்மை இயக்குனரகம் சார்பில், மாம்பழ உற்பத்தி அதிகம் உள்ள

தேனி மாவட்டத்தில் மாம்பழ விவசாயிகள் பயன்பெறும் வகையில், ஒரு சிறப்பு கருத்தரங்கை நடத்தியது.இதில் 300க்கும் மேற்பட்ட மாம்பழ விவசாயிகள் பங்கேற்றனர்.

## தேசிய பயிர் காப்பீட்டு திட்டப் பணிகள் தீவிரம்: துணை இயக்குநர் ராசு தகவல்

விழுப்புரம்: தேசிய பயிர் காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்துவதில் தோட்டக்கலை துறை தீவிரமாக செயல்பட்டு வருவதாக துணை இயக்குநர் ராசு தெரிவித்துள்ளார். விழுப்புரம் மாவட்ட தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ராசு விடுத்துள்ள செய்திகுறிப்பு:

தோட்டக்கலை துறை சார்பில் தேசிய பயிர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப் படுகிறது. தோட்டக்கலை பயிர் சாகுபடி விவசாயிகளுக்கு இயற்கை சீற்றம் வெள்ளம், வறட்சி மற்றும் பூச்சி தாக்குதலால் ஏற்படும் இழப்புகளை தவிர்க்கவும், இழப்பீடு பெறவும் இந்த திட்டம் உதவி புரிகிறது. வாழை, மஞ்சள், மரவள்ளி, மிளகாய் ஆகியவற்றிற்கு பயிர் காப்பீட்டு திட்டத்தில் பிரீமியம் செலுத்தும் விவசாயிகளுக்கு பயிர் சேதம் ஏற்பட்டால் இழப்பீடு பெற வழிவகை செய்யப்படுகிறது.

திட்ட பலன்களை முழுமையாக அடைய விவசாயிகள் வட்டார அளவில் உதவி வேளாண்மை அலுவலர்கள், தோட்டக்கலை அலுவலர்கள் ஆகியோரை தொடர்பு கொள்ள வேண்டும். ஒரு ஹெக்டர் வாழைக்கு ரூ.3 லட்சத்து 54 ஆயிரத்து 265 இழப்பீட்டு தொகையாகவும், ரூ.21 ஆயிரத்த 256 பிரீமியம் தொகையாக வழங்கப்படுகிறது. மரவள்ளி இழப்பீடு ரூ.3 லட்சத்து 68 ஆயிரத்து 486, பிரீமியம் ரூ.11 ஆயிரத்து 975 வழங்கப்படுகிறது. மஞ்சளுக்கு ரூ.1 லட்சத்து 75 ஆயிரத்து 92 இழப்பீடு, பிரீமியம் ரூ.5,253, வெங்காயம் இழப்பீடு ரூ.69 ஆயிரத்து 667, பிரீமியம் ரூ. 10 ஆயிரத்து 180 தொகை வழங்கப்படுகிறது.

தொடர்பு எண்கள் :

கண்டமங்கலம் தோட்டக்கலை உதவி இயக்குநர் ராசுவை 98426 57810 மொபைல் எண்ணில் தொடர்பு கொள்ளலாம். அதே போல் கோலியனூர் உதவி இயக்குநர் வீராசாமி- 88701 73105, காணை, சின்னசேலம், உளுந்தூர்பேட்டை பகுதிகளுக்கு வானூர் அலுவலர் அன்பழகன்- 94869 85252, மயிலம், திருவெண் ணெய்நல்லூர் பகுதிகளுக்கு மரக்காணம் அலுவலர் வெங்கடேசன்- 99430 72887 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். செஞ்சி, வல்லம், மேல்மலையனூர் பகுதி விவசாயிகள் ஒலக்கூர் அலுவலர் காரல்மார்க்ஸ்- 99947 16499, விக்கிரவாண்டி, திருநாவலூர், கள்ளக்குறிச்சி, வெள்ளிமலை பகுதி விவசாயிகள் சங்கராபுரம் அலுவலர் திருமாலை -75020 31251, முகையூர் பகுதி விவசாயிகள் தியாகதுருகம் அலுவலர் வாமலை- 97876 70367, ரிஷிவந்தியம், திருக்கோவிலூர் பகுதிகளுக்கு கோலியனூர் அலுவலர் முருகன்- 96889

40083 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு துணை இயக்குநர் ராசு தெரிவித்துள்ளார்.

## மேட்டூர் அணை நீர்வரத்து 20,087 கனஅடியாக சரிவு

மேட்டூர்: காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் குறைந்ததால், கர்நாடகாவின் கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளின் நீர்திறப்பு குறைக்கப்பட்டுள்ளது. இதனால், கடந்த, 28ம் தேதி வினாடிக்கு, 40,215 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து, நேற்று முன்தினம், 32,898 கனஅடியாகவும், நேற்று, 20,087 கனஅடியாகவும் சரிந்தது. அதற்கேற்ப கடந்த சில நாட்களாக தினமும், 3 டி.எம்.சி., வீதம் அதிகரித்த மேட்டூர் அணை நீர்இருப்பு, தற்போது நாள் ஒன்றுக்கு, ஒரு டி.எம்.சி.,வீதம் மட்டுமே உயர்கிறது. நேற்று முன்தினம், 80.090 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று, 81.210 அடியாகவும், 42.045 டி.எம்.சி.,யாக இருந்த நீர் இருப்பு, நேற்று, 43.173 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது. நேற்று அணை நீர்மட்டம், ஒரு அடியும், நீர் இருப்பு, ஒரு டி.எம்.சி.,யும் மட்டுமே அதிகரித்துள்ளது. கடந்த, 12 நாளில் நீர்மட்டம், 34 அடியும், நீர் இருப்பு, 27 டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது. நேற்று கபினியில் வினாடிக்கு, 11,000 கனஅடி, கே.ஆர்.எஸ்.,ல், 8,000 கனஅடி நீர் காவிரியில் திறக்கப்பட்டது. வரும் நாட்களிலும் மேட்டூர் அணை நீர்வரத்தில் இதே நிலை நீடிக்கும் என, அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

## நதிநீர் பாசன ஆலோசனை கூட்டம்

ஈரோடு: அமராவதி நதிநீர் பாசன பாதுகாப்பு இயக்கத்தின், ஆலோசனை கூட்டம், தாராபுரத்தில் நடந்தது. அமராவதி நதிநீர் பாசன இயக்கம் மற்றும் ரயில்வே மக்கள் பணி சங்கமும் இணைந்து, கமிட்டி அமைக்கப்பட்டது. ஆகஸ்ட், 17ம் தேதி, தென்னக நதிகளை போர்க்கால அடிப்படையில் மத்திய, மாநில அரசுகள் இணைக்க நடவடிக்கை எடுக்கக்கோரி, கரூரில் மாநாடு நடத்துவது. இதற்கான கமிட்டி தலைவராக, வெங்கடாசலம், செயலாளர் சிவசுப்பிரமணியம், உப செயலாளர் குமார், பொருளாளர் ஜவஹர் உள்ளிட்ட நிர்வாகிகள் நியமிக்கப்பட்டனர். ஒருங்கிணைப்பாளர் லிங்கம் சின்னசாமி நன்றி கூறினார்.

## இயந்திரம் மூலம் நெற்பயிர் நடவு வேளாண் அதிகாரிகள் யோசனை

கோபிசெட்டிபாளையம்: கோபி வட்டாரத்தில், நெல் நடவுப்பணி தீவிரமாக நடக்கிறது. நெல் சாகுபடி செலவை குறைக்கவும், நெல் மகசூலை அதிகரிக்கவும், திருந்திய நெல்

சாகுபடி முறை மற்றும் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்தல், ஆகிய இரு தொழில் நுட்பங்களை, வேளாண் துறை பிரபலப்படுத்தி வருகிறது.

இத்தொழில் நுட்பம் குறித்து, பாரியூர் பகுதியில் பழனிசாமி மற்றும் தங்கவேல் ஆகியோர் வயல்களில் செயல்விளக்கம் காண்பிக்கப்பட்டது. ஈரோடு மாவட்ட வேளாண் இணை இயக்குனர் செல்வராஜ், துணை இயக்குனர் கார்த்திகேயன், உதவி இயக்குனர்கள் சண்முகசுந்தரம் மற்றும் வாசுதேவன் ஆகியோர் உடனிருந்தனர். ஏற்பாடுகளை, வேளாண் அலுவலர் முரளி, துணை வேளாண் அலுவலர் நாகராஜன் ஆகியோர் செய்திருந்தனர். வேளாண் இணை இயக்குனர் செல்வராஜ் கூறுகையில், ""இயந்திரம் மூலம், நெல் நாற்று நடவு செய்தால், வேலையாட்கள் பற்றாக்குறை சமாளிக்கலாம். நடவு நாற்றங்கால் மற்றும் விதை வாங்கும் செல்வுகள் குறையும். ஏக்கருக்கு, 800 முதல், 1,000 கிலோ வரைகூடுதல் மகசூல் கிடைக் கும். எனவே, விவசாயிகள், இயந்திரமுறை நெல் நடவு மற்றும் திருந்திய நெல் சாகுபடி முறைகளை பின்பற்றி பயனடைய வேண்டும்," என்றார்.

## விவசாய கடன் வழங்கும் முகாம்

அரியலூர்: அரியலூர் பஞ்சாப் நேஷனல் பாங்க் சார்பில், விவசாயிகளுக்கு கடன் வழங்கும் முகாம் நடந்தது. முகாமுக்கு, வங்கி கிளை மேலாளர் முரளி தலைமை வகித்தார். விவசாய அலுவலர் கன்ஷிராம் வரவேற்றார். அரியலூர் வட்டாரத்துக்குட்பட்ட, 65 விவசாயிகளுக்கு, தொழில் கடனுக்கான காசோலைகளை, பஞ்சாப் நேஷனல் பாங்க், திருச்சி மண்டல மேலாளர் தாமோதரன் வழங்கி பேசினார். முகாமில் பாளையக்குடி முத்தமிழ்வீரன், வக்கீல்கள் மனோகரன், திருமாவளவன், வேளான் பிரதிநிதிகள் விஜயகுமார், அட்சயகுமார் மற்றும் விவசாயிகள் பலரும் பங்கேற்றனர்.

## திருவாரூரில் குறுவை சாகுபடிக்கு ரூ.9.68 கோடி

திருவாரூர்: ""திருவாரூர் மாவட்டத்தில், குறுவை சாகுபடிக்காக, ஒன்பது கோடியே, 68 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது," என்று அமைச்சர் காமராஜ் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம், குடவாசலில் தமிழக அரசின் குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தில், விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கும் விழா நடந்தது.

திருவாரூர் ஆர்.டி.ஒ., பரமசிவம் தலைமை வகித்தார். நாகை எம்.பி., கோபால், வேளாண்மை இணை இயக்குநர் மயில்வாகணன், துணை இயக்குனர் நடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

குடவாசல் ஊராட்சி ஒன்றிய தலைவர் பாப்பா சுப்பிரமணியன், துணைத் தலைவர் ராஜேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டு பேசினர். இதில், 294 விவசாயிகளுக்கு, 13

லட்சத்து, 67 ஆயிரத்து, 900 ரூபாய் மதிப்பிலான உரம், உயிர் உரம், பூச்சி மருந்து உட்பட விவசாயத்திற்கான இடுபொருட்களை வழங்கி உணவு துறை அமைச்சர் காமராஜ் பேசியதாவது:

திருவாரூர் மாவட்டத்தில், நடப்பாண்டில் நிலத்தடி நீரை பயன்படுத்தி, 62 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, தமிழக முதல்வர் சிறப்பு தொகுப்பு திட்டத்தை அறிவித்து, இந்த மாவட்டத்திற்கு, ஒன்பது கோடியே 68 லட்சம் நிதி ஒதுக்கியுள்ளார். இதில் நெல் நடவு இயந்திரம், 50 பேருக்கு, ஒரு கோடி ரூபாய் மதிப்பிலும், களை எடுக்கும் கருவி, 15 லட்சம் மதிப்பிலும் மற்றும் உரங்கள், பூச்சி மருந்துகள், பி.வி.சி., பைப்புகள் என, விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அமைச்சர் காமராஜ் தெரிவித்துள்ளார்.

## பழநி உழவர் சந்தைக்கு காய்கறிகள் வரத்து குறைகிறது! வறட்சியால் விளைச்சல் பாதிப்பு, விலை அதிகரிப்பு

பழநி : பழநி பகுதியில் போதிய மழையில்லாமல், விளைச்சல் பாதிக்கப்பட்டு பழநி உழவர்சந்தைக்கு காய்கறிகளின் வரத்து ஒவ்வொரு வாரமும் டன் கணக்கில் குறைந்துகொண்டே வருகிறது. இதனால் விலை உயர்ந்துள்ளது.

பழநி அருகேயுள்ள கணக்கன்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, மற்றும் எரமநாயக்கன்பட்டி, பொட்டம்பட்டி, பழைய ஆயக்குடி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள் தங்களது விளை நிலங்களில் விளைந்த காய்கறிகளை அன்றாடம், பழநி சண்முகபுரத்திலுள்ள உழவர் சந்தைக்கு விற்பனைக்கொண்டு வருகின்றனர்.ஏப்ரலில், நாள்ஒன்றிற்கு 25டன் வரை உழவர் சந்தைக்கு காய்கறிகள் வரத்து இருந்தது. தற்போது போதிய மழையில்லாமல் காய்கறிகளின் விளைச்சல் பாதிக்கப்பட்டு, வரத்தும் நாளுக்குநாள் குறைந்துள்ளது. ஜூலை 3 ல் 17 டன் காய்கறிகள் விற்பனை வந்தது. தற்போது, அது 14 டன்னாக குறைந்துள்ளது. கத்தரி, தக்காளி, அவரை உள்ளிட்ட காய்கறிகளின் விலையும், கிலோவிற்கு ஐந்து ரூபாய் முதல் 10 ரூபாய் வரை அதிகரித்துள்ளன.

**காய்கறிகளின் விலை விபரம்(கிலோவில்):** தக்காளி முதல் ரகம்- 44, அவரை- ரூ.30, கோஸ்-ரூ.24, வெங்காயம்-ரூ.38, பெல்லாரி-ரூ.26, முருங்கை-ரூ.36, கத்தரி-ரூ.18, வெண்டை-ரூ.12, பீர்க்கு-ரூ.16, பீட்ரூட்- ரூ.30 க்கும் விற்பனையானது. உழவர்சந்தை அதிகாரி ஒருவர் கூறுகையில், ""கண்மாய்கள், பாசனக்கால்வாய்களில் தண்ணீர் இல்லாததால், காய்கறிகள் விளைப்பதை பெரும்பாலான விவசாயிகள்

தவிர்த்துள்ளனர். இதனால், சந்தைக்கு ஒவ்வொரு வாரமும் ஒரு டன் முதல் மூன்று டன் வரை காய்கறிகள் வரத்து குறைந்து கொண்டே வருகிறது. இதனால் விலையும் உயர்ந்துள்ளது. மற்ற மொத்த வியாபாரகடை, வெளிச்சந்தைகளை விட உழவர்சந்தையில், அன்றைய தினம் பறிக்கப்பட்ட காய்கறிகள், விலையும் குறைத்து விற்கப்படுவதால், காலை 8 மணிக்கே காய்கறிகள் விற்பனை முடிந்துவிடுகிறது,என்றார்.

## கிணறுகள் வறண்டதால் டேங்கரில் தண்ணீர் நிரப்பி விவசாயம்

தேவதானப்பட்டி : தேவதானப்பட்டி அருகே கன்னிமார்புரத்தில் வறட்சியால் விவசாயக் கிணறுகள் வறண்டதால், போர்வெல்லில் கிடைக்கும் நீரை சிறிய டேங்கர்களில் நிரப்பி பாசனத்திற்கு பயன்படுத்துகின்றனர்.

பெரியகுளம் தாலுகா, கன்னிமார்புரத்தில் வராகநதியில் வரும் நீரை நிலத்தடி நீராதாரமாக கொண்டு வாழை, தென்னை, தக்காளி, சோளம் சாகுபடி நடக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக இப்பகுதியில் போதிய மழை பெய்யவில்லை. மேலும் வராகநதியின் நீர்பிடிப்பு பகுதியிலும் மழை பொய்த்து விட்டது. இதனால் ஆறு வறண்டு கிடக்கிறது. இக்கிராமத்தில் வராகநதியின் கரையோரங்களில் உள்ள 100க்கும் மேற்பட்ட விவசாயக் கிணறுகள் வறண்டு விட்டன. நீரின்றி தென்னை, வாழை மரங்கள் காய்ந்து வருகின்றன. இக்கிராமத்தை சேர்ந்த எர்ரையன், அழகுமலை, அழகர்சாமி ஆகியோர் போர்வெல் அமைத்துள்ளனர். அதில் கம்ப்பரசர் மூலம் நீரை எடுத்து ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 3 தொட்டிகளில் நீரை நிரப்பி வாழை, சோளம், சீமைப்புல் ஆகியவற்றிற்கு நீரை பாய்ச்சி வருகின்றனர். இரவு பகல் நேரங்களில் 12 மணி நேரம் கம்ப்ரசரை இயக்கினால் 3000 லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. இந்த நீரை பைப் மூலம் பயிர்களுக்கு பாய்ச்சுகின்றனர். கடந்த 10 மாதங்களாக இதே முறையில் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

*விவசாயி பி.எர்ரையன் கூறியதாவது: கடந்த மூன்றாண்டுகளாக பருவமழை பெய்யவில்லை. ஆற்றில் நீர்வரத்து இல்லை. விவசாயக் கிணறு வறண்டு விட்டது. கிடைக்கும் குறைந்த அளவு நீரை சிக்கனமாக பயன்படுத்தி வாழை சாகுபடி செய்துள்ளோம். நாளுக்கு நாள் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால் போர்வெல்லில் கிடைக்கும் நீரின் அளவும் குறைந்து வருகிறது. இப்பகுதியில் 90 சதவீதம் விவசாயப்பணிகள் நடக்கவில்லை. எப்படியும் மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் உள்ளோம், என்றார்.

## மழை பொய்த்ததால் விவசாயத்தை துவக்க முடியாமல் விவசாயிகள் தவிப்பு; கை கொடுக்கும் 100 நாள் திட்டம்

சிவகங்கை : சிவகங்கையில், ஆண்டு சராசரி மழை அளவை விட, குறைந்த அளவே மழை பெய்துள்ளதால், மழையை நம்பி காத்திருக்கும் விவசாயிகள்,பணிகளை துவங்க முடியாமல், தவித்து வருகின்றனர்.

"ஆடி பட்டம் தேடி விதை' என்பர். எவ்வளவு வறட்சியாக இருந்தாலும், ஆடியில் நல்ல மழை பெய்து, விவசாயிகள் நடவு பணிகளை துவக்கி விடுவர். அந்த வகையில், சிவகங்கை மாவட்டத்தில், பெரும்பாலான விவசாயிகள் பருவ மழையை நம்பியே விவசாயம் செய்கின்றனர். மாவட்டத்தில்,1.20 லட்சம் எக்டேரில், 85 ஆயிரம் எக்டேரில் மட்டுமே நெல் நடவு செய்கின்றனர். எஞ்சிய நிலங்களில் கரும்பு, பருத்தி, மிளகாய், தானிய பயிர் நடவு செய்து வருகின்றனர்.

**மழை குறைவு:** இம்மாவட்டத்தில், வடகிழக்கு, தென்மேற்கு பருவ மழை மட்டுமின்றி,இதர காலங்களில் ஆண்டிற்கு சராசரியாக 904.7 மி.மீ., மழை பெய்ய வேண்டும். ஆனால், ஜூலை வரை, 242.58 மி.மீ., மழை மட்டுமே பெய்துள்ளது. சராசரியை விட, 27 சதவீதம் மட்டுமே மழை பெய்துள்ளது. அதற்கு அடுத்த படியாக, ஜூன் முதல் செப்டம்பர் வரை, தென்மேற்கு பருவ மழை காலம். இப்பருவ காலங்களில் மட்டுமே, சராசரியாக 106.8 மி.மீ., மழை பதிவாக வேண்டும். ஆனால், ஜூலை வரை, மிக மிக குறைவாக 39.29 மி.மீ., மட்டுமே பெய்துள்ளது.

**பொருளாதாரம் பாதிப்பு:** இதனால், விவசாயிகள் விவசாய பணிகளை துவக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். வருமானம் இன்றி விவசாயிகள் தவிக்கின்றனர். ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் மழை பெய்தால், மட்டுமே இந்த ஆண்டிற்கான விவசாய பணிகளை துவக்க முடியும் என்ற நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

**கைகொடுத்த 100 நாள்:** தற்சமயம், விவசாய பணிகள் இல்லாமல் போனதால், வருமானம் இன்றி, விவசாய குடும்பங்கள் தவித்து வருகின்றன. விவசாய குடும்பத்தை சேர்ந்த பெண்களுக்கு, கைகொடுக்கும் வகையில்,மாவட்ட அளவில் வேலை உறுதி திட்டம் மூலம், கண்மாய்,வரத்து கால்வாய் தூர்வாருதல், ரோடுகள் செப்பனிடும் பணி நடப்பதால் இதன் மூலம் ஓரளவு வருவாய் கிடைக்கிறது.

## ஆடி பெருக்கில் விதை விதைக்க விவசாயிகளிடம் இல்லை ஆர்வம்

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஆடிப்பெருக்கில் விதை விதைக்க, கடும் வறட்சியால் விவசாயிகள் ஆர்வமின்றி உள்ளனர்.

ஆண்டு தோறும் ஆடி பெருக்கன்று, தங்களது வயல்களில் மக்கா சோளம், பருத்தி , சூரிய காந்தி, நெல், காய்கறி பயிர்களுக்கு, விவசாயிகள் விதை நடவு செய்வது வழக்கம். இந்தாண்டு ஆடிபெருக்கு ஆக.,3ம் தேதி வருகிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளாக மழை சரி வர பெய்யாததால், கண்மாய்கள், கிணறுகளில் தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. போர்வெல்களிலும் 600 அடிக்கும் கீழ் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து போனது. கடந்த பல மாதங்களாக இப்பகுதியில் விவசாயம் பாதிக்கப் பட்டுள்ளது. ஆடிப்பெருக்கிற்காக ஆண்டு தோறும் விதை நடவு செய்யும் விவசாயிகள், இந்தாண்டு தண்ணீர் இல்லாததால் விவசாய பணியை செய்ய முடியாமல் தவிக்கின்றனர். விவசாயி மாரியப்பன்,"" ஆண்டு தோறும் ஆடிபெருக்கன்று 12 ஏக்கரில் பல்லாரி, விதை நடவு செய்வேன். இந்தாண்டு மழை இல்லாததால் கிணறுகளில் தண்ணீர் இல்லை. நடவு செய்ய முடியாத நிலை உள்ளது ,"என்றார்.விதை விற்பணையாளர் வன்னியராஜ்,"" வறட்சியால் பல்லாரி, மிளகாய், காய்கறிகள், நெல் விதைகள் இருப்பு இருந்தும், வாங்குவதற்கு யாரும் வரவில்லை. குறைந்த அளவிலே வாங்கி இருப்பு வைத்துள்ளேன். வீட்டு தோட்டத்தில் நடவு செய்ய பாகல், கத்திரி, வெண்டை போன்ற விதைகளை, 10 ரூபாய் அளவில் அதிகளவில் வாங்கி செல்வர். தற்போது வீடுகளில் போர்வெல் தண்ணீர் விலைக்கு வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளதால், அந்த விதைகள் கூட விற்பனையாவதில்லை,"என்றார்.

தினகரன்

## பயிரை நாசம் செய்யும் பூச்சிகளை விரட்ட மூலிகை தாவரங்கள்

உடுமலை, : விவசாய பயிர்களை அழிக்கும் பூச்சிகளை ஒழிக்க ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துகிறோம். இதனால் மக்களுக்கு மட்டுமல்ல, கால்நடைகளுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. அதை தவிர்க்க மூலிகை தாவரங்களை பயன்படுத்தி பூச்சிகளை விரட்டி விடலாம்.

நொச்சி இலை, சங்குப்பூ, எருக்கன் பூஇலை, சோற்றுக்கற்றாழை இலை, வேப்பஇலை, ஆடாதோடா இலை, கருவேலம் இலை, புங்கமர இலை மற்றும் விதை, அரளிப்பூ இலை மற்றும் விதை, காட்டாமணாக்கு இலை, ஊமத்தை இலை மற்றும் காய், பப்பாளி இலை, புகையிலையில் உலர்தூள், உண்ணிச்செடி இலைகள், விளாம்பழ இலைகள், பிரண்டையில் அனைத்து பாகங்கள், மஞ்சள்தூள், தும்பைச்செடி,காட்டுப் புகையிலை

மற்றும் ஆர்டீமிங்சியா இலைகள் ஆகியவை பயன்படும். இவற்றில் குறைந்தது 10 தாவரங்களில் இருந்து தலா அரை கிலோ வீதம் எடுத்துக் கொண்டு 20 லிட்டர் பசுங்கோமியம் மற்றும் 2 கிலோ பசுஞ்சாணம் ஆகியவற்றை கலந்து பிளாஸ்டிக் கொள்கலனில் அடைக்க வேண்டும். நாள் ஒன்றுக்கு அந்த கலவையை இருமுறை கலக்க வேண்டும். 10 முதல் 15 நாட்களில் நொதித்தல் முறையில் மருந்து தயாராகி விடும். பிறகு இதை வடிகட்டி தெளிவான கரைசலை பயன்படுத்தி பூச்சிகளை விரட்டியடிக்கலாம்.

மற்றொரு முறையில் குறைந்தது 10 தாவரங்களை சேகரித்து 15 லிட்டர் தண்ணீரில் கலந்து மண்பானையில் 3 மணி நேரம் கொதிக்க வைக்க வேண்டும். கலவை குளிர்ச்சி அடைந்ததும் 2 கிலோ மஞ்சள் தூள் சேர்த்து 12 மணி நேரம் வைக்க வேண்டும். பிறகு அதை வடிகட்டி விட்டு 100 லிட்டர் தண்ணீருக்கு 5 லிட்டர் கரைசல் வீதம் கலந்து பயிர்கள் மீது தெளித்தால் போதும். இதன்மூலம் அனைத்து வித பூச்சிகள் தாக்குதலின்றி பூரண பயிர் பாதுகாப்பு கிடைக்கும் என வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வேளாண்துறை அதிகாரிகள் ஆய்வு

காவேரிப்பாக்கம்,: காவேரிப்பாக்கம் ஒன்றியத்துக்கு உட்பட்ட சிறுகரும்பூர், வேகாமங்கலம் ஆகிய கிராமங்களில் வேளாண் துறை அதிகாரிகளி ஆலோசனைப்படி விவசாயிகள் திருந்திய நெல்சாகுபடி முறையில் பயிர்செய்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று வேளாண்மை இணை இயக்குநர் ஜெயசுந்தர், உதவி இயக்குநர் ஸ்டீபன் ஜெயக்குமார் மற்றும் அலுவலர்கள் நெல்பயிரிட்டுள்ள நிலங்களில் ஆய்வு செய்து பயிர்களை பார்வையிட்டனர்.

பின்னர் இணை இயக்குநர் ஜெயசுந்தர் விவசாயிகளிடம் கூறுகையில், விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையை கடைபிடித்து நெல் மகசூலை இரட்டிப்பாக்க வேண்டும். மேலும் கோணா களைக்கருவி கொண்டு 10 நாட்கள் இடைவெளியில் நடவு நட்டப்பின் 2 முறை களைநீக்கம் செய்யவேண்டும்.

இந்த முறையை பின்பற்றி நெல் நடவு செய்யும் காவேரிப்பாக்கம் ஒன்றியத்துக்கு உட்பட்ட கரிவேடு ஆயர்பாடி சிறுகரும்பூர் கிராம விவசாயிகளுக்கு நடவு கூலியாக ஹெக்டேருக்கு ரூ.3750 வழங்கப்பட உள்ளது என்றனர்.

## பண்ணை குட்டை விவசாயிகளுக்கு அதிக பயன்தரும் வேளாண் அதிகாரி தகவல்

காவேரிப்பாக்கம், தென்மேற்கு பருவமழையை பயன்படுத்திக்கொள்ள விவசாயிகள் பண்ணை குட்டை அமைக்கவேண்டும் என காவேரிப்பாக்கம் வேளாண் உதவி இயக்குனர் ஸடீபன் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது: தென்மேற்கு பருவமழையை பயன்படுத்திக்கொள்ள விவசாயிகள் அனைவரும் தங்கள் விளைநிலங்களில் தாழ்வானப் பகுதியில் பண்ணைகுட்டை அமைக்க வேண்டும்.

காவேரிப்பாக்கம் ஒன்றியத்துக்கு நடப்பு ஆண்டு நிர்ணையிக்கப் பட்டுள்ள 155 பண்ணைகுட்டைகளை அமைக்கவுள்ள விவசாயிகள் பட்டியல் தற்போது வேளாண்மைத் துறையின் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இதில் வயல், மண்வகை மற்றும் ஆழத்திற்கு ஏற்ப 50 அடி நீளம், 50 அடி அகலம் மற்றும் 5அடி ஆழமுள்ள பண்ணைக்குட்டை அமைப்பதனால் மழைநீர் வீணாகமல் சேமிக்கலாம். அதன் மூலம் மீன்களும் வளர்க்கலாம். மேலும் கால்நடைகளுக்கு தேவையான வளர்ப்பதற்க்குத் தேவையான நீரும் கிடைக்கும் என்பதோடு நிலத்தடி நீர்மட்டமும் உயரும்.

எனவே பண்ணைக்குட்டை அமைக்க விரும்பும் விவசாயிகள் அனைவரும் காவேரிப்பாக்கம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் தங்கள் பெயரை பதிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வானிலை மையம் தகவல் கோழிகளுக்கு வெப்ப அயற்சி ஏற்படும்

நாமக்கல், : நாமக்கல் கால்நடை கல்லூரி வானிலை ஆலோசனை மையம் வெளியிட்டுள்ள வானிலை அறிக்கை:

தென்மேற்கு பருவமழையின் தாக்கம் தென் கர்நாடகம், கேரளத்தில் மட்டுமே காணப்படுவதால் தமிழகத்தில் மழையற்ற தன்மையே நீடிக்கும். மேகசிதறல்களும், வேகமாக காற்று வீசும் வானிலையே நிலவும். பகல் வெப்பம் 98.6 டிகிரி பாரன்ஹீட்டையொட்டி இருக்கும். இதனால் கோழிகளிடையே வெப்ப அயற்சி காணப்படும். தீவன எடுப்பு இயல்பையொட்டியே இருக்கும். தென்மேற்குப் பருவமழை ஆகஸ்ட் மாதத்தில் நல்ல அளவு மழைபொழிவை கொண்டு வர வாய்ப்புள்ளது. ஆடி, ஆவணிப் பட்டத்தில் துவரை விதைப்பவர்கள் கோ6, கோ7, வம்பன் ரக விதைகளை

ஏக்கருக்கு 6 கிலோ என்ற அளவில் தனிப் பயிராகவும், 2 கிலோ என்ற அளவில் கலப்புப்பயிராகவும் விதைப்பதால் அதிக மகசூலைப் பெறமுடியும்.

பயிர் வளர்பருவத்தில் வறட்சியை தாங்கி வளர 2 சதவீதம் பொட்டாசியம் குளோரைடுடன் 100 பிபிஎம் போரான் கலந்த கரைசலை தெளிக்க வேண்டும்.இவ்வாறு வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிருஷ்ணகிரி பகுதியில் முள்ளங்கி விலை வீழ்ச்சி

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி பகுதியில் முள்ளங்கி விலை சரிந்தது.

கிருஷ்ணகிரி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் குறைந்த நாட்களில் மகசூலை தரும் முள்ளங்கியை பயிரிட்டுள்ளனர்.

தற்போது பண்டிகை காலம் என்பதால் காய்கறி விற்பனை அதிக அளவில் இருக்கும் என்ற எண்ணத்தில் ஏராளமானோர் முள்ளங்கியை பயிரிட்டுள்ளனர்.கடந்த மாதம் ஒரு கிலோ தி 10 முதல் தி 12 வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் இப்போது கிலோ தி6 முதல் தி8 வரை மட்டுமே விற்பனை ஆவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## கோழிப்பண்ணைகளில் பறவை காய்ச்சல் விழிப்புணர்வு கருத்தரங்கம்

நாமக்கல், : பறவை காய்ச்சல் மற்றும் கோழிப்பண்ணைகளில் உயிர்பாதுகாப்பு முறைகள் விழிப்புணர்வு பயிற்சி நாமக்கல்லில் கால்நடை மருத்துவர்களுக்கு அளிக்கப்பட்டது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் மைய பல்கலைக்கழக ஆய்வகம், கோழியின நோய் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு ஆய்வகம் ஆகியவை சார்பில் கால்நடை மருத்துவர்களுக்கான பறவைக் காய்ச்சல் விழிப்புணர்வு மற்றும் கோழிப்பண்ணைகளில் உயிர்பாதுகாப்பு முறைகள் குறித்த கருத்தரங்கம் நாமக்கல்லில் நடைபெற்றது.

மைய பல்கலைக்கழக தலைவர் பரிமள்ராய் வரவேற்றார். நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் துரைசாமி கருத்தரங்கை துவக்கி வைத்தார். மகாராஷ்ரா மாநில தொழில்துறை வளர்ச்சி குழும முதன்மை அலுவலர் டாக்டர் அன்பழகன் பறவை காய்ச்சல் நோய் குறித்து பேசினார். நாமக்கல் மண்டல கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் டாக்டர் சக்திவேலு கருந்தரங்கின் மலர் மற்றும் குறுந்தகட்டின் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். ஓய்வு பெற்ற கால்நடை நலக்கல்வி மைய இயக்குனர் வேணுகோபாலன், போபாலில் உள்ள கால்நடை உயர்நிலை உயிர்பாதுகாப்பு ஆய்வக விஞ்ஞானி நாகராஜன், அமெரிக்கா

வெர்ஜினியா பல்கலைகழக பேராசிரியர் சுப்பையா இளங்குமாரன், சுகுனா நிறுவன இணை மேலாளர் டாக்டர் ஜெகதீசன் உள்ளிட்ட பலர் பேசினர். கருந்தரங்கில் கலந்து கொண்ட கால்நடை மருத்துவர்களுக்கு கோழி பண்ணையில் உயிர் காப்பு முறைகள் குறித்து நேரடி செயல் விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது. கோழியின நோய் ஆய்வக பேராசிரியர் மற்றும் தலைவர் மோகன் நன்றி கூறினார்.

## பயிர் சாகுபடியோடு இதர பணிகளில் ஈடுபட்டால் பேரிழப்பில் இருந்து மீளலாம் வேளாண் முகாமில் தகவல்

பெரம்பலூர், : பயிர் சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகள், ஊடு பயிர்முறையில் சாகுபடி செய்தல், கால்நடை வளர்த்தல், இயற்கை எரிவாயு தயாரித்தல், மண்புழு உரம் தயாரித்தல் போன்றவற்றில் ஈடுபட்டால் பேரிழப்பில் இருந்து மீளலாம் என்று பெரம்பலூர் அடுத்த செஞ்சேரி கிராமத்தில் நடை பெற்ற வேளாண் முகாமில் தெரிவிக்கப்பட்டது. திருச்சி மாவட்டம், நவலூர் குட்டப்பட்டு அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய இறுதியாண்டு மாணவிகள் 10 பேர் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று வேளாண் சாகுபடித் தொழில்நுட்பம் குறித்தும், கூடுதல் மகசூல் பெறும் யுக்திகள் குறித்தும், விவசாயிகளின் அனுபவங்கள் குறித்தும் கள ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் படி, பெரம்பலூர் அருகேயுள்ள செஞ்சேரி கிராமத்துக்கு நேற்று சென்ற கல்லூரி மாணவிகள் அப்பகுதியைச் சேர்ந்த முன்னோடி விவசாயியான பெரியசாமி என்பவரது வயலில் கம்பு பயிர் சாகுபடி முறை, அறுவடை செய்தல், களத்தில் டிராக்டரைக் கொண்டு அடித்துத் தூற்றி தானியமாகச் சேகரிக்கும் முறை ஆகியவற்றை நேரில் கண்டறிந்தனர். அப்போது அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நவீன வேளாண் தொழில்நுட்பம் குறித்து ஆலோசனை அளித்த மாணவிகள், பயிர் சாகுபடியோடு, வயலைச் சுற்றி மரக் கன்று நடுதல், கால்நடைகளை வளர்த்தல், அவற்றைகொண்டு இயற்கை உரம் தயாரித்தல், சாண எரிவாயு தயாரித்தல், எரிவாயு தயாரித்த பிறகும் எஞ்சிய கழிவு களில் இருந்து மண்புழு உரம் தயாரித்தல் போன்ற இதர பணிகளை மேற்கொள்வதால் பேரிழப்பிலிருந்து விவசாயிகளால் மீள முடியும். மேலும், கிணற்றில் உள்ள குறைந்த தண்ணீரையும் அரசு மானியங்களுடன் சொட்டுநீர்ப் பாசன, தெளிப்புநீர் பாசனக் கருவிகளைக் கொண்டு சிக்கனமாகப் பயன்படுத்தி சாகுபடிசெய்தல், சாகுபடிசெய்திடும் பயிர்களுக்கு இடையே ஊடுபயிர் முறையில் சாகுபடி செய்தல் போன்றவற்றால் பேரிழப்புகளில் இருந்து விவசாயிகள் தப்பிக்க முடியும் என்றனர்.

நிகழ்ச்சியில் கல்லூரி மாணவிகள் அஃப்சின் ரஹ்மான், அறிவுக்கொடி, பாலபாரதி, பிருந்தா தேவி, சிப்பி, சாருஷா சந்திரன், தன்யா கிறிஸ்டினா, மீனாம்பிகை, நிவேதா நிர்மல்குமார், சுபஸ்ரீ பிரியதர்ஷினி ஆகியோர் கலந்துகொண்டு விவசாயிகளின் சந்தே கங்களுக்கு விளக்கமளித்துப் பதிலளித்தனர்.

அதே வேளையில் விவசாயிகளின் கிராமப்புற உத்திகளை கேட்டறிந்து குறிப்பெடுத்துக் கொண்டனர்.

## உழவர்கள் குழுவாக செயல்பட்டு வேளாண் பொருளை விற்பனை செய்தால் அதிக லாபம் பெறலாம் மாநில பயறுவகை உற்பத்தி ஜ் உயர்மட்டக்குழு தலைவர் பேச்சு

திருவிடைமருதூர், : திருவிடைமருதூர் அடுத்த ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் 31வது காவிரி நீர்ப்பாசன மண்டல ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க ஆலோ சனை கூட்டம் நேறறு முன்தினம் நடந்தது. நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் முனைவர் ராஜேந்திரன் வரவேற்றார்.

தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணை வேந்தர் மற்றும் குழு தலைவர் முனைவர் ராமசாமி, மாநில பயறுவகைகள் உற்பத்தி உயர்மட்ட குழு தலைவர் வேதநாராயணன், ஓய்வுபெற்ற சர்வதேச உழவியல் விஞ்ஞானி முனைவர் பாலசுப்ரமணியன், பல்கலைக்கழக உயர் அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த முனைவர் மகேஷ்வரன், பொன்னுசாமி, அனந்தகுமார், ராமராஜி, சின்னத்துரை உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்று விவசாய இன்றைய தொழில்நுட்பங்களை பற்றி எடுத்துரைத்தனர்.

இதைதொடர்ந்து காவிரி பாசன மண்டலத்தை சேர்ந்த உழவர் உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளின் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது. சிறப்பு விருந்தினராக பங்கேற்ற வேதநாராயணன் பேசும் போது, உழவர்கள் குழுவாக செயல்பட்டு வேளாண் பொருளை விற்பனை செய்வதில் அதிக கவனம் செலுத்தினால் நல்ல லாபம் பெறலாம். பயறுவகை உற்பத்தியை பெருக்க பயறுவகை பயிறுக்கான மகத்துவ மையத்தை காவிரி பாசன மண்டலத்தில் துவக்க வேண்டும். விவசாயிகள் ஒற்றுமையாக செயல்பட்டு வணிகரீதியில் விவசாயத்தை திட்டமிட்டு செய்தால் எதிர்காலம் சிறப்பாக இருக்கும். நாம் கலாசாரத்துடன் இணைந்து வேளாண்மையில் வெற்றி காண பல்கலைக்கழகமும், வேளாண்துறையும் செயல்படும் என்றார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## சோளம் விலை என்ன?



சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு முன்னரே தகவல் தெரிவிக்கும் வகையில் சோளத்துக்கான விலை குறித்த கணிப்பை திருச்சியில் உள்ள வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், "இந்தியாவில்சோளம் பயிரிடும் பரப்பு 1961 முதல் 2011 வரையிலான காலத்தில் 18.2 மில்லியன்ஹெக்டேரிலிருந்து 6.3 மில்லியன் ஹெக்டேராக குறைந்துள்ளது. மேலும், இதன்உற்பத்தி 8 மில்லியன் டன்களிலிருந்து 6 மில்லியன் டன்களாக குறைந்துள்ளது. ஆனால் உற்பத்தித் திறன் ஹெக்டேருக்கு 440 கிலோவிலிருந்து 961 கிலோவாகஉயர்ந்துள்ளது.

தமிழகத்தில் தானியம் மற்றும் தீவனப் பயிராக சோளம் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் நடைபெறும் சோளம் சாகுபடியில் திண்டுக்கல், திருச்சி, கோவை, கரூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் மட்டும் 76 சதவீதம் அளவுக்கு நடைபெறுகின்றன. திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்களில் பாரம்பரிய விதை வகைகளான மஞ்சள் சோளம், வெள்ளைச் சோளம், கரிச் சோளம், காரடிச் சோளம் ஆகியவையும்,மேலும் சி 030, பிஎஸ்ஆர்ஐ மற்றும் சிஎஸ்எச் 5 ஆகிய ரகங்களும் பயிரிடப்படுகின்றன.

தமிழகத்தில் ஜூலை - அக்டோபர், அக்டோபர் - பிப்ரவரி மற்றும் கோடைப்பருவத்திலும் சோளம் சாகுபடி நடைபெறுகிறது. சந்தை மற்றும் பொருளியல் ஆய்வுகளின் அடிப்படையில் இந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் ஒரு கிலோ சோளத்துக்கு ரூ.18 மற்றும் ரூ.19 விலை கிடைக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் விவரங்கள் அறிய மையத்தின் துணை இயக்குநரை 94435 93971 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

Keywords: சோளம் சாகுபடி, சோளம் விலை, வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம்,

## பறவைத் தடுப்பு வலைகள்



திராட்சை உள்ளிட்ட பழத் தோட்டங்களில் பறவைகளால் விவசாயிகளுக்கு பெருமளவு மகசூல் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, தோட்டங்களில் உள்ள பழங்களை பறவைகள் சேதப்படுத்துவதைத் தடுக்கும் வகையில் பறவைத் தடுப்பு வலைகளை விவசாயிகள் பயன்படுத்தலாம் என தமிழக அரசின் தோட்டக்கலைத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

தேனி மாவட்டத்தில் திராட்சைத் தோட்டங்களில் பறவைத் தடுப்பு வலைகள் அமைக்க தேசிய தோட்டக் கலை இயக்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. ஆலங்கட்டி மழை பெய்யும்போது ஏற்படும் பாதிப்புகளையும் இந்த பறவைத் தடுப்பு வலைகளைக் கொண்டு தடுக்கலாம்.

## மீன்கள் விலை கடும் உயர்வு: வஞ்சிரம் கிலோ ரூ.900



ஆடி மாதம் மற்றும் அண்டை மாநிலங்களில் மீன்பிடி தடை ஆகிய காரணங்களால் மீன்களின் விலை அதிகரித்துள்ளது. கிலோ ரூ.400-க்கு விற்கப்பட்ட வஞ்சிரம், தற்போது ரூ.900 ஆக அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் மீன்பிடி தடை காலம் நீங்கியதையடுத்து, கடந்த ஒரு மாதமாக மீன்களின் விலை குறைந்திருந்தது. இந்நிலையில், தற்போது மீண்டும் விலை அதிகரித் துள்ளது.

இதுகுறித்து திருவள்ளூர் மாவட்ட பாரம்பரிய ஐக்கிய மீனவர் சங்க பொதுச் செயலாளர் மகேந் திரன், ‘தி இந்து’விடம் கூறியதாவது:

ஆடி மாதத்தில் அம்மன் கோயில்களில் மட்டுமின்றி வீடுகளிலும் கூழ்வார்த்தல் நிகழ்ச்சி நடக்கும். வீடுகளில் அம்மனுக்கு வைக்கப்படும் படையலில் அசைவம் பிரதானமாக இடம் பெற்றி ருக்கும். அதிலும், குறிப்பாக மீன் உணவு அதிகளவில் இருக்கும். இதன்காரணமாக, ஆடி மாதத்தில் மீன்களின் தேவை அதிகரிக்கும்.

அண்டை மாநிலங்களான கேரளம், கர்நாடகத்தில் இருந்து தமிழகத்துக்கு அதிகளவில் மீன்கள் வரும். தற்போது அங்கு மீன்பிடி தடை காலம் அமலில் உள்ளதால் வரத்து குறைந்துள்ளது. இந்த இரண்டு காரணங்களால் மீன்களின் விலை அதிகரித்துள்ளது.

ஒரு கிலோ ரூ.400-க்கு விற்கப் பட்ட வஞ்சிரம் மீன், தற்போது ரூ.750 முதல் ரூ.900 வரை விற்பனை யாகிறது. ரூ.120-க்கு விற்ற ‘ஷீலா’, ரூ.300 ஆகவும், ரூ.200-க்கு விற்ற சங்கரா, ரூ.300 ஆகவும் அதிகரித்துள்ளது. இறால் கிலோ ரூ.350-ல் இருந்து ரூ.550-க்கும், வவ்வால் ரூ.300-ல் இருந்து ரூ.450 முதல் ரூ.500 வரைக்கும் விலை உயர்ந்துள்ளது.

கேரளம், கர்நாடகத்தில் ஆக. 31-ம் தேதியுடன் மீன்பிடி தடை காலம் முடிகிறது. அதன்பிறகே மீன்களின் வரத்து அதிகரித்து விலை குறையும். இவ்வாறு மகேந்திரன் கூறினார்.

## மல்லசமுத்திரம் அருகே ரூ.1½ கோடிக்கு பருத்தி ஏலம்

மல்லசமுத்திரம் அருகே சூரியகவுண்டம்பாளையத்தில் உள்ள திருச்செங்கோடு வேளாண்மை விற்பனை சங்கத்தில் பருத்தி ஏலம் நடைபெற்றது. ஆத்தூர், திருச்செங்கோடு கோவை, ராசிபுரம், கொங்கணாபுரம் ஆகிய பகுதிகளில் இருந்து வந்த பருத்தி வியாபாரிகள் கலந்து கொண்டு பருத்தி ஏலம் எடுத்தனர். ஒரு கிலோ பருத்தி ரூ.79 முதல் ரூ.80.50 வரை ஏலம் மூலம் விற்பனையானது. மொத்தம் 7 ஆயிரம் பருத்தி மூட்டைகள் ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டது. இவை ரூ.1 கோடியே 50 லட்சத்திற்கு ஏலம் போனது.

மாமுண்டி, அக்கரைப்பட்டி, பாலமேடு, பாப்பிரெட்டிப்பட்டி, மல்லசமுத்திரம், அக்கரபாளையம், ஆட்டையாம்பட்டி உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் பருத்தி மூட்டைகளை ஏலத்திற்கு கொண்டு வந்தனர்.

## நீர்வரத்து தொடர்ந்து குறைவு: மேட்டூர் அணை திறப்பு தாமதமாகும்

காவிரியில் நீர்வரத்து தொடர்ந்து குறைந்து வருவதால், பாசனத்துக்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுவது மேலும் தாமதமாகும் சூழல் உருவாகியுள்ளது.

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் 12-ஆம் தேதி பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படும். ஆனால், அணையில் இருக்கும் தண்ணீரின் அளவு, நீர்வரத்தைப் பொருத்து அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படும் நாள் வேறுபடும்.

ஜூன் மாதம் 12-ஆம் தேதி திறந்துவிடப்படும் தண்ணீர், ஜனவரி மாதம் 28-ஆம் தேதி நிறுத்தப்படும். இந்தக் காலகட்டத்தில் சுமார் 320 டி.எம்.சி. தண்ணீரைப் பயன்படுத்தி சுமார் 16 லட்சம் ஏக்கரில் குறுவை, சம்பா, தாளடி ஆகிய முப்போகம் பயிர்கள் விளைவிக்கப்படும். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இருப்பு இல்லாத காரணத்தால் குறிப்பிட்ட காலத்தில் அணை திறக்கப்படவில்லை. கடந்த 2011-ஆம் ஆண்டில் பருவமழையைக் கருத்தில் கொண்டு ஜூன் 6-ஆம் தேதியே அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

ஆனால், 2012-ஆம் ஆண்டில் போதிய தண்ணீர் இல்லாததால் செப்டம்பர் 17-ஆம் தேதிதான் அணை திறக்கப்பட்டது. இருப்பினும், அப்போது தொடர்ச்சியாக தண்ணீர் வழங்க முடியாததால் முப்போக விளைச்சல் கிடைக்கவில்லை. இதேநிலைதான், கடந்த ஆண்டும் தொடர்ந்தது.

2013-ஆம் ஆண்டில்தான் கடந்த பல ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அணையின் நீர்மட்டம் 15 அடிக்கும் கீழே சென்றது. இந்த நிலையில், ஜூலை மாதம் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை பெய்ததால், கர்நாடகத்தில் இருந்து மேட்டூருக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதையடுத்து, முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருந்த தேதியான ஆகஸ்ட் 12-க்கு முன்னதாக 2-ஆம் தேதியே அணை திறக்கப்பட்டது. இந்த நிலையில், 2014-ஆம் ஆண்டின் தொடக்க மாதங்களில் அணை நீர்மட்டம் வழக்கம்போல தொடர்ந்து சரிவடைந்து வந்தது. ஜூலை 2-ஆவது வாரத்தில் கர்நாடக, கேரள மாநிலங்களில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்ததால், கர்நாடக மாநிலத்தில்

காவிரியில் நீர்வரத்து அதிகரித்தது. இதனால், கடந்த சில நாள்களாக மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவும் அதிகரித்து இருந்தது.

கடந்த 8-ஆம் தேதி அணையின் நீர்மட்டம் 47 அடியாகவும், நீர்வரத்து நொடிக்கு 2,348 கன அடியாகவும் இருந்தது. கடந்த 18-ஆம் தேதி நீர்வரத்து 4,354 கன அடியாக உயர்ந்தது. இதன்பிறகு, கர்நாடகத்தில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டதால் அணைக்கு நீர்வரத்து வேகமாக அதிகரித்தது. கடந்த 28-ஆம் தேதி அதிகபட்ச அளவாக நொடிக்கு 40,215 கன அடி தண்ணீர் மேட்டூருக்கு வந்தது. இதையடுத்து, அணையின் நீர்மட்டம் 77.81 அடியாக உயர்ந்தது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை முதல் நீர்வரத்து தொடர்ந்து குறைந்து வருகிறது.

செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் நொடிக்கு 32,898 கன அடியாக இருந்த நீர்வரத்து, புதன்கிழமை காலை மேலும் குறைந்து நொடிக்கு 20,087 கன அடியானது. இதனால், செவ்வாய்க்கிழமை காலை 80.09 அடியாக இருந்த நீர்மட்டம், புதன்கிழமை 81.21 அடியாக மட்டுமே உயர்ந்தது.

அணை விரைவில் நிரம்பும் போது, டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு தேதி அறிவிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு இருந்து வந்தது. ஆனால், நீர்மட்டம் 90 அடியை எட்டுவதற்குள்ளேயே நீர்வரத்து குறைந்துள்ளது.

எனவே, கடந்த ஆண்டு திறக்கப்பட்ட நாளான ஆகஸ்ட் 2-இல் கூட அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடுவதற்கான வாய்ப்பு இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது. மேலும், கர்நாடக அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் நீர்திறப்பு குறைக்கப்பட்டிருப்பதால், இப்போதைக்கு மேட்டூர் அணை திறப்பதற்கான வாய்ப்பில்லை எனக் கருதப்படுகிறது.

## மத்திய அரசின் அறிவிப்பால் தமிழகத்துக்கு பாதிப்பில்லை: நெல் கொள்முதல்: நிகழாண்டிலும் ஊக்கத்தொகை வழங்கப்படும்

நெல்லுக்கான ஊக்கத்தொகையை வழங்கும் விவகாரத்தில் மத்திய அரசின் இப்போதைய அறிவிப்பால் தமிழகத்துக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. நிகழாண்டிலும் நெல்லுக்கான ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

அதன்படி, நிகழாண்டிலும் நெல்லுக்கான ஊக்கத்தொகையை குவிண்டாலுக்கு சன்ன ரகத்துக்கு ரூ.70-ம், சாதாரண ரகத்துக்கு ரூ.50-ம் கூடுதலாக வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நெல் கொள்முதலுக்கு மாநில அரசு ஊக்கத்தொகை வழங்குவது தொடர்பாக மத்திய அரசின் சுற்றறிக்கை குறித்த சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் சட்டப்பேரவையில் புதன்கிழமை கொண்டு வரப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின் மீது சி.எச்.சேகர் (தேமுதிக), குணசேகரன் (இந்திய கம்யூனிஸ்ட்), என்.ஆர்.ரங்கராஜன் (காங்கிரஸ்), ஜவாஹிருல்லா (மனித நேய மக்கள் கட்சி) ஆகியோர் பேசினர். இதற்கு முதல்வர் ஜெயலலிதா அளித்த பதில்:

மத்திய அரசால் நிகழாண்டுக்கான நெல் கொள்முதல் விலை கடந்த 7-ஆம் தேதி அறிவிக்கப்பட்டது. இதன்படி, வரும் அக்டோபர் 1 முதல் ஒரு குவிண்டால் சாதாரண ரக நெல்லுக்கு ரூ.1,360-ம், சன்னரக நெல்லுக்கு ரூ.1,400-ம் கிடைக்கும். தமிழக அரசு வழங்கும் ஊக்கத்தொகை குறித்த அறிவிப்பு செப்டம்பர் மாத இறுதியில் வெளியிடப்படுவது வழக்கம்.

இந்த நிலையில், மத்திய அரசின் உணவு, பொது விநியோகத்துறை அமைச்சகம், கடந்த ஜூன் 12-ஆம் தேதி ஒரு சுற்றறிக்கையை அனுப்பியது.

அதன்படி, பொது விநியோகத் திட்டம், பிற மக்கள் நலத்திட்டத்துக்கென மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுக்கான நெல் கொள்முதலுக்கு மட்டுமே மத்திய அரசு மானியம் வழங்கும் எனவும், அதற்குக் கூடுதலாக கொள்முதல் செய்யப்படும் நெல்லைப் பயன்படுத்திக் கொள்வது என்பது மாநில அரசின் பொறுப்பே எனவும், அதற்கான செலவை மாநில அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், கூடுதல் நெல்லை வாங்கிக் கொள்ள வேண்டிய கட்டாயமில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது.

பாதிப்பு இல்லை: பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டம் என்பது கடந்த 1997-98-ஆம் ஆண்டிலேயே மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. அதனை திமுக ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தவில்லை. எனது ஆட்சியில் கடந்த 2002-ஆம் ஆண்டு தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன்படி, இந்திய உணவுக் கழகத்தின் முகவராக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் செயல்பட்டு, இந்திய உணவுக் கழகத்தின் சார்பில் நெல் கொள்முதல் செய்கிறது. அவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட நெல்லைப் பாதுகாத்து அரசின் அரசி ஆலைகள், தனியார் அரிசி ஆலைகள் மூலமாக அரிசியாக்கி பொது விநியோகத் திட்டத்துக்கு வழங்குகிறது.

இவ்வாறு வழங்கப்படும் அரிசியின் அளவு, மத்திய அரசு வழங்கிட வேண்டிய அரிசியின் பகுதியாக கணக்கிடப்பட்டு மீதமுள்ள அரிசியை மட்டும் மத்திய அரசு வழங்குகிறது.

பொது விநியோகத் திட்டம், இதர மக்கள் நலத் திட்டங்களுக்கென தமிழகத்துக்கு இப்போது ஒதுக்கப்பட்டுள்ள அரிசியின் அளவு ஆண்டுக்கு 35.58 லட்சம் மெட்ரிக் டன்னாகும். நெல் என்ற அளவில் அது 52.32 லட்சம் மெட்ரிக் டன்.

தமிழகத்தில் இதுவரை அதிகபட்சமாக 23.81 லட்சம் மெட்ரிக் டன் நெல் மட்டுமே அதாவது, 16.19 லட்சம் மெட்ரிக் டன் அரிசி மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. தமிழகத்துக்கென மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு ஆண்டுக்கான அரிசியை விட குறைவாகவே நெல் கொள்முதல் செய்யப்படுவதால், மத்திய அரசின் இப்போதைய அறிவிப்பின் மூலம் தமிழகத்துக்கு எந்தவித பாதிப்பும் இல்லை.

நிகழாண்டிலும் தொடரும்: விவசாயிகளுக்கான பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது. அதன்படி, நிகழாண்டிலும் நெல்லுக்கான ஊக்கத்தொகையை குவிண்டாலுக்கு சன்ன ரகத்துக்கு ரூ.70-ம் (ரூ.1,470), சாதாரண ரகத்துக்கு ரூ.50-ம் கூடுதலாக (ரூ.1,410) வழங்கப்படும். விவசாயிகளின் விடிவெள்ளியாக தமிழக அரசு தொடர்ந்து விளங்கும் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

## நாளை முதல் சென்னைக்கு கிருஷ்ணா நீர்: அதிகாரிகள் நம்பிக்கை

ஆந்திர மாநிலம், கண்டலேறு அணையிலிருந்து தமிழகத்துக்கு வெள்ளிக்கிழமை (ஆக.1) முதல் கிருஷ்ணா நீர் திறந்து விடப்படும் என்று பொதுப்பணித் துறை அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டுத் திட்டத்தின்படி ஆண்டுக்கு 12 டி.எம்.சி. தண்ணீரை ஆந்திர அரசு, தமிழகத்துக்கு வழங்க வேண்டும். அதன் அடிப்படையில் இந்த ஆண்டு பிப்ரவரியில் இருந்து விநாடிக்கு 500 கன அடி வீதம் 5.8 டி.எம்.சி தண்ணீர் தமிழகத்துக்கு வந்துள்ளது.

இந்நிலையில், கடந்த மே 31-ஆம் தேதி தமிழகத்துக்கு வந்து கொண்டிருந்த கிருஷ்ணா நீர் திடீரென நிறுத்தப்பட்டது. சென்னை மக்களின் தாகம் தீர்க்கும் முக்கிய நீர் ஆதாரமான கிருஷ்ணா நீர், எந்த விதமான முன்னறிவிப்புமின்றி நிறுத்தப்பட்டதால் நகரில் குடிநீர் விநியோகம் பாதிக்கும் சூழல் எழுந்தது.

இதையடுத்து, கிருஷ்ணா நீரைத் திறந்து விடுவது குறித்து தமிழக பொதுப்பணித் துறை அதிகாரிகள், ஆந்திர அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

மேலும் இது தொடர்பாக மாநில நீர்வள ஆதாரத் துறை அதிகாரிகள் ஆந்திரத்துக்குச் சென்று கோரிக்கைக் கடிதத்தையும் அளித்தனர்.

இதையடுத்து வரும் ஆகஸ்ட் 1-ஆம் தேதி முதல் தமிழகத்துக்குத் தண்ணீர் திறந்து விடுவதாக ஆந்திர அதிகாரிகள் உறுதியளித்ததாகத் தெரிகிறது.

இது குறித்து தமிழக பொதுப்பணித் துறை உயர் அதிகாரி ஒருவர் கூறியது:

ஆந்திர மாநிலம், கண்டலேறு அணையில் தமிழகத்துக்குத் தண்ணீர் வழங்கத் தேவையான அளவு நீர் இருப்பு உள்ளது.

எனவே வெள்ளிக்கிழமை முதல் தமிழகத்துக்குத் தண்ணீர் திறந்துவிடப்படும் என எதிர்பார்க்கிறோம். விநாடிக்கு 500 கன அடி நீர் முதலில் திறந்து விடப்படும். பிறகு, படிப்படியாக அதன் அளவு உயர்த்தப்படும் என்றார்.

## பல்கலை. சார்பில் கால்நடை கோழி வளர்ப்பு கண்காட்சி

மதுரையில் கால்நடை, கோழி வளர்ப்பு தொடர்பான பணியரங்கு மற்றும்கண்காட்சி வெள்ளிக்கிழமை துவங்கி 2 நாள்கள் நடைபெற உள்ளது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டு மற்றும் சர்வதேச பண்ணைய ஆண்டு ஆகியவற்றை முன்னிட்டு இக் கண்காட்சி நடத்தப்படுகிறது. மடீட்சியா அரங்கில் வெள்ளி (ஆக.1) மற்றும் சனிக்கிழமை நடைபெறுகிறது. பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

குடும்ப பண்ணையம் மூலம் லாபகரமான கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு என்ற தலைப்பில் நடைபெறும் இந் நிகழ்வில், கண்காட்சி, தொழில்நுட்ப விரிவுரைகள், தொழில்நுட்ப செயல் விளக்கங்கள், உழவர் விவாத மேடை ஆகியவை நடத்தப்படும்.

கண்காட்சியில் கலந்துகொள்ளும் பண்ணையாளர்களுக்கு, உகந்த தொழில்நுட்பங்கள், பண்ணை இயந்திரங்கள், கருவிகள், கால்நடை உற்பத்தி பொருள்கள், மதிப்பூட்டுதல் குறித்த செயல் விளக்கங்கள், விற்பனை வாய்ப்புகள் அளித்தல், பண்ணையாளர்களின் கண்டுபிடிப்புகள், வெற்றிக்கதைகள், கறவை மாடு மற்றும் ஆடு வளர்ப்பு தொழில்ல்நுட்பங்கள், இறைச்சிக் கோழி, முட்டைக்கோழி, நாட்டுக் கோழி, ஜப்பானியக் காடை, வான்கோழி போன்ற கோழியினங்கள் வளர்ப்பு தொழில்நுட்பங்கள், வெண்பன்றி மற்றும் முயல் வளர்ப்பு தொழில்நுட்பங்கள், பசுந்தீவன உற்பத்தி வழிமுறைகள், மதிப்பூட்டிய பால் மற்றும் இறைச்சிப் பொருள்கள் தயாரிப்பு போன்ற விவரங்கள் இடம்பெற உள்ளன.

நிகழ்ச்சியில், பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறை நிபுணர்கள், வங்கிகளின் உயர் அதிகாரிகள் பங்கேற்கினறனர். கால்நடை பண்ணையாளர்கள், விவசாயிகள், சுய உதவிக்

குழுவினர், தொழில் முனைவோர், பொதுமக்கள் இதில் கலந்து கொண்டு பயன் பெறலாம். அனுமதி இலவசம்.

பல்கலைக்கழக உழவர் பயிற்சி மையத் தலைவர் மற்றும் பேராசிரியர் மா.கதிர்ச் செல்வன் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

## கால்நடை மற்றம் கோழி வளர்ப்பு கருத்தரங்கு: மதுரையில் நாளை நடைபெறுகிறது

கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு தொடர்பான கண்காட்சி மற்றும் கருத்தரங்கு, வெள்ளிக்கிழமை (ஆகஸ்ட் 1) மதுரையில் நடைபெற உள்ளது.

இது தொடர்பாக, கண்காட்சிக்கான விவசாயிகள் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், கால்நடை பல்கலைக்கழக ஆராய்ச்சி மைய (திண்டுக்கல்) பேராசிரியருமான எஸ். பீர்முகமது தெரிவித்துள்ளது:

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் வெள்ளி விழா ஆண்டினை முன்னிட்டு, குடும்ப பண்ணையம் மூலம் லாபகரமான கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு குறித்து கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நடைபெற உள்ளது.

மதுரை மடீட்சியா கூட்ட அரங்கில் நடைபெறும் இக் கண்காட்சியை, மதுரை மாவட்ட ஆட்சியர் எல். சுப்பிரமணியன் தொடங்கி வைக்கிறார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொறுப்பு) மற்றும் பதிவாளர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் சிறப்புரை நிகழ்த்துகிறார். விரிவாக்க கல்வி இயக்குநர் (கால்நடை பல்கலை.) சி. சந்திரஹாசன் உள்பட பலர் நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.

நிகழ்ச்சியில், லாபகரமான முறையில் கால்நடை வளர்ப்பது குறித்த விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்படும். மேலும், தீவன செலவினைக் குறைத்து, கிராம பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்தும் கருத்து பரிமாற்றம் நடைபெறும். எனவே, கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், கருத்தரங்கில் பங்கேற்று பயன்பெறலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளுக்கு தொழு உரம் தயாரித்தல் முகாம்

திருவாடானையில் விவசாயிகளுக்கு ஊட்ட மேற்றிய தொழு உரம் தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

திருவாடானை வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற முகாமுக்கு மேலாண்மை முகமை வட்டாரக் குழுத் தலைவர் மணிமாறன் தலைமை வகித்தார். உதவி இயக்குநர் நாகராஜ் முன்னிலை வகித்தார்.

மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் அறிவாசன் கலந்து கொண்டு உணவு உற்பத்தி இயக்கத்தின் கீழ் நெல் மற்றும் தானியங்கள் உற்பத்தியை இருமடங்காக உயர்த்திட ஒருங்கிணைந்த பண்ணை முறையில் நவீன தொழில் நுட்பங்களை பின்பற்றி கடைபிடித்திட அறிவுரை வழங்கினார்.

பரமக்குடி உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் உதுமான் பேசுகையில், வேளாண்மைதுறை, தோட்டகலைத்துறை, கால்நடைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை மற்றும் இதர வேளாண்மை சார்ந்த துறை தொழில் நுட்பங்களை விளக்கி கூறினார்.

திருவாடானை வேளாண்மை உதவி இயக்குநர் நாகராஜ் பேசுகையில், நடப்பு பருவத்திற்கு தேவையான விதைகள், உயிர் உரங்கள், ரசாயன உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், பயிர் பாதுகாபப்பு கருவிகள், ஆயில் என்ஜின்கள், பண்ணை குட்டைகள் மற்றும் இதர இடுபொருட்கள் இருப்பு மற்றும் நலத்திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

முகாமில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு ஊட்ட மேற்றிய தொழு உரம் தயாரித்து வழங்கப்பட்டது. முகாம் ஏற்பாட்டினை வேளாண்மை அலுவலர் சரவணன், வட்டார தொழில் நுட்ப மேலாளர் சூரியா, உதவி வேளாண்மை அலுவலர் ராதாகிருஷ்ணன், சுப்பிரமணி, ராஜேஸ்வரி உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## வெள்ளக்கோவிலில் 626 மூட்டை கொப்பரை ஏலம்

வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் 626 மூட்டை கொப்பரை விற்பனை செய்யப்பட்டது.

இந்த வார ஏலத்திற்கு, மொத்தம் 33,114 கிலோ கொப்பரை வரத்து இருந்தது. முதல் தர கொப்பரை அதிக பட்ச விலை கிலோ ரூ. 101.65, குறைந்த பட்ச விலை ரூ. 83.65 என ஏலம் போனது. கொப்பரையின் தரத்தைப் பொறுத்து சராசரி விலை கிலோ ரூ. 92.65 ஆக இருந்தது.

திருப்பூர், கரூர், ஈரோடு மாவட்டப் பகுதிகளிலிருந்து விவசாயிகளும், காங்கயம், ஈரோடு, கொடுமுடி ஆகிய ஊர்களிலிருந்து வியாபாரிகளும் இதில் பங்கேற்றனர்.

மொத்த தொகை ரூ. 28 லட்சத்து 98 ஆயிரத்து 800 விவசாயிகளுக்குப் பட்டுவாடா செய்யப்பட்டது. விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகுடேஸ்வரன் பணப்பட்டுவாடா பணிகளை மேற்கொண்டார்.

## காளான் வளர்ப்பு செயல் விளக்கப் பயிற்சி

காளான் வளர்ப்பு மற்றும் அசோலா உற்பத்தி குறித்த செயல் விளக்கப் பயிற்சி நடைபெற்றது.

வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும், பொள்ளாச்சி வாணவராயர் வேளாண் கல்லூரி, 4-ஆம் ஆண்டு மாணவர்கள், டி.என்.பாளையம் பகுதியில், கிராமத் தங்கல் திட்டத்தின் கீழ், 3 மாத காலப் பயிற்சியைத் துவக்கியுள்ளனர்.

டி.என்.பாளையம் வட்டாரத்தில் கிராமங்களில் தங்கி, விவசாயம் குறித்து அவர்களின் வயல்களுக்கு நேரடியாகச் சென்று பயிற்சி பெற்றும், புதிய தொழில்நுட்பங்கள் குறித்து, விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தும் வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, டி.என்.பாளையம் வட்டாரத்தில் உள்ள டி.ஜி.புதூர் நால்ரோட்டில் உள்ள வேளாண் பண்ணை மகளிருக்கு, வேளாண் சார்ந்த தொழில்களான, காளான் வளர்ப்பு, அசோலா உற்பத்தி குறித்து பயிற்சியளித்தனர்.

இந்நிகழ்ச்சிக்கு, வேளாண் உதவி இயக்குநர் சிதம்பரம் தலைமை வகித்தார். பொள்ளாச்சி வாணவராயர் கல்லூரி மாணவர் சுனில் வரவேற்றார். கல்லூரி மாணவர் சிலம்பரசன், அசோலா உற்பத்தி குறித்து பயிற்சியளித்தார்.

இதற்கான ஏற்பாடுகளை வேளாண் அலுவலர் சரோஜா, உதவி வேளாண் அலுவலர் ஜனனி ஆகியோர் செய்திருந்தனர்.

## திருச்செங்கோட்டில் ரூ.2.30 கோடிக்கு பருத்தி விற்பனை

திருச்செங்கோடு கூட்டுறவுச் சந்தையில் புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ.2.30 கோடிக்கு பருத்தி விற்பனையானது.

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்க மல்லசமுத்திரம் கிளைக்கு 7 ஆயிரம் மூட்டைகள் பருத்தி விற்பனைக்கு வந்தன. மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்து விவசாயிகள் இவற்றைக் கொண்டு வந்தனர். இவை ரூ. 2.30 கோடிக்கு விற்பனையாகின. சுரபி ரகம் குவிண்டாலுக்கு ரூ.7500 முதல் ரூ. 8071 வரை விற்பனையானது. பிடி ரகம் ரூ.5000 முதல் ரூ. 5560 வரை விலை போனது. பருத்திக்கு அதிக விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர் என்று சங்கத்தின் மேலாண் இயக்குநர் லோகநாதன் தெரிவித்தார்.

## நுகர்வு அதிகரிப்பதால் முட்டை விலை உயர வாய்ப்பு

ரமலான், வடக்கு ஸ்ராவண் பண்டிகைகள் முடிந்ததை அடுத்து, முட்டை நுகர்வு அதிகரித்து வருவதால், இதுவரை ரூ.2.60-ஆக சரிந்த முட்டை கொள்முதல் விலை இனிமேல் உயர வாய்ப்புள்ளதாக நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்

குழு தெரிவித்துள்ளது. இதனால், பண்ணையாளர்கள் என்இசிசி அறிவிக்கும் விலைக்கே முட்டைகளை விற்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

என்இசிசி புள்ளி விவரப்படி நாமக்கல் மண்டலத்தில் கடந்த ஜூலை 1-ஆம் தேதி ரூ.3.63ஆக இருந்த முட்டை கொள்முதல் விலை 5-ஆம் தேதி ரூ.3.55,

11-ஆம் தேதி ரூ.3.50, 15-ஆம் தேதி ரூ.3.20, 21-ஆம் தேதி ரூ.2.90, 25-ஆம் தேதி ரூ.2.80 என படிப்படியாகக் குறைந்து 29-ஆம் தேதி முதல் ரூ.2.60ஆக நீடிக்கிறது.

இந்த முட்டை கொள்முதல் விலை இதற்கும்மேல் குறைய வாய்ப்பில்லை என்றும், மாறாக முட்டை நுகர்வு அதிகரித்து வருவதால் இனிமேல் முட்டை விலை உயர மட்டுமே வாய்ப்பு இருப்பதாகவும் நாமக்கல் மண்டல என்இசிசி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அதன் தலைவர் பொ.செல்வராஜ் வெளியிட்ட அறிக்கை:

ரமலான், வடக்கு ஸ்ராவண் பண்டிகைகள் காரணமாக முட்டை நுகர்வு வெகுவாகக் குறைந்ததை அடுத்து, கடந்த சில வாரங்களில் முட்டை விலையும் ரூ.2.60 வரை சரிந்தது. தற்போது ரமலான் பண்டிகைகள் முடிந்து கேரள மாநிலத்தில் முட்டை விற்பனை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. அதேபோல, வட மாநிலங்களில் ஸ்ராவண் மூன்று வாரங்கள் முடிவடைந்து அந்த மாநிலங்களில் தென்மேற்குப் பருவ மழை தீவிரம் அடைந்துள்ளதாலும் முட்டையின் நுகர்வு அதிகரித்துள்ளது. இதற்கிடையே, போதிய மழையின்மையால் காய்கறிகள் வரத்து குறைந்து அதன் விலையை உயர்த்தியுள்ளது. இதன்காரணமாகவும் முட்டை நுகர்வு சற்று அதிகரித்துள்ளது.

மேலும், ஆகஸ்ட் 3-ஆம் தேதி ஆடிப் பெருக்கு பண்டிகைக்குப் பிறகு, தமிழகத்திலும் முட்டை நுகர்வு அதிகரிக்கக்கூடும். இவற்றின் காரணமாக இனி முட்டை கொள்முதல் விலை

ரூ.2.60-க்கு கீழ் குறைய வாய்ப்பில்லை. மாறாக முட்டை விலை உயரக்கூடும் என்பதால், பண்ணையாளர்கள் உண்மை நிலவரத்தை என்இசிசி அறிவிக்கும் விலைக்கே முட்டைகளை விற்பனை செய்ய வேண்டும்.

வியாபாரிகளும் சூழ்நிலைகளைச் சாதகமாக்கிக் கொண்டு பண்ணையாளர்களை நசுக்கி முட்டைகளை என்இசிசி அறிவிக்கும் விலையிலிருந்து குறைத்து வாங்குவதைக் கைவிட்டு மூன்று லட்சத்துக்கு அதிகமான மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் முட்டைக் கோழிப் பண்ணைத் தொழிலைப் பாதுகாக்க வேண்டும் என்றார் அவர்.

## மேட்டூர் அணை திறப்பு தாமதமாகும்

காவிரியில் நீர்வரத்து தொடர்ந்து குறைந்து வருவதால், பாசனத்துக்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுவது மேலும் தாமதமாகும் சூழல் உருவாகியுள்ளது.

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் 12-ஆம் தேதி பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படும். ஆனால், அணையில் இருக்கும் தண்ணீரின் அளவு, நீர்வரத்தைப் பொருத்து அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படும் நாள் வேறுபடும்.

ஜூன் மாதம் 12-ஆம் தேதி திறந்துவிடப்படும் தண்ணீர், ஜனவரி மாதம் 28-ஆம் தேதி நிறுத்தப்படும். இந்தக் காலகட்டத்தில் சுமார் 320 டி.எம்.சி. தண்ணீரைப் பயன்படுத்தி சுமார் 16 லட்சம் ஏக்கரில் குறுவை, சம்பா, தாளடி ஆகிய முப்போகம் பயிர்கள் விளைவிக்கப்படும்.

ஆனால், கடந்த சில ஆண்டுகளாக மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இருப்பு இல்லாத காரணத்தால் குறிப்பிட்ட காலத்தில் அணை திறக்கப்படவில்லை. கடந்த 2011-ஆம் ஆண்டில் பருவமழையைக் கருத்தில் கொண்டு ஜூன் 6-ஆம் தேதியே அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

ஆனால், 2012-ஆம் ஆண்டில் போதிய தண்ணீர் இல்லாததால் செப்டம்பர் 17-ஆம் தேதிதான் அணை திறக்கப்பட்டது. இருப்பினும், அப்போது தொடர்ச்சியாக தண்ணீர் வழங்க முடியாததால் முப்போக விளைச்சல் கிடைக்கவில்லை. இதேநிலைதான், கடந்த ஆண்டும் தொடர்ந்தது.

2013-ஆம் ஆண்டில்தான் கடந்த பல ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அணையின் நீர்மட்டம் 15 அடிக்கும் கீழே சென்றது. இந்த நிலையில், ஜூலை மாதம் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை பெய்ததால், கர்நாடகத்தில் இருந்து மேட்டூருக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதையடுத்து, முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருந்த தேதியான ஆகஸ்ட் 12-க்கு முன்னதாக 2-ஆம் தேதியே அணை திறக்கப்பட்டது.

இந்த நிலையில், 2014-ஆம் ஆண்டின் தொடக்க மாதங்களில் அணை நீர்மட்டம் வழக்கம்போல தொடர்ந்து சரிவடைந்து வந்தது. ஜூலை 2-ஆவது வாரத்தில் கர்நாடக, கேரள மாநிலங்களில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்ததால், கர்நாடக மாநிலத்தில் காவிரியில் நீர்வரத்து அதிகரித்தது. இதனால், கடந்த சில நாள்களாக மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவும் அதிகரித்து இருந்தது.

கடந்த 8-ஆம் தேதி அணையின் நீர்மட்டம் 47 அடியாகவும், நீர்வரத்து நொடிக்கு 2,348 கன அடியாகவும் இருந்தது. கடந்த 18-ஆம் தேதி நீர்வரத்து 4,354 கன அடியாக

உயர்ந்தது. இதன்பிறகு, கர்நாடகத்தில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டதால் அணைக்கு நீர்வரத்து வேகமாக அதிகரித்தது.

கடந்த 28-ஆம் தேதி அதிகபட்ச அளவாக நொடிக்கு 40,215 கன அடி தண்ணீர் மேட்டூருக்கு வந்தது. இதையடுத்து, அணையின் நீர்மட்டம் 77.81 அடியாக உயர்ந்தது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை முதல் நீர்வரத்து தொடர்ந்து குறைந்து வருகிறது.

செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் நொடிக்கு 32,898 கன அடியாக இருந்த நீர்வரத்து, புதன்கிழமை காலை மேலும் குறைந்து நொடிக்கு 20,087 கன அடியானது. இதனால், செவ்வாய்க்கிழமை காலை 80.09 அடியாக இருந்த நீர்மட்டம், புதன்கிழமை 81.21 அடியாக மட்டுமே உயர்ந்தது.

அணை விரைவில் நிரம்பும் போது, டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு தேதி அறிவிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு இருந்து வந்தது. ஆனால், நீர்மட்டம் 90 அடியை எட்டுவதற்குள்ளேயே நீர்வரத்து குறைந்துள்ளது.

எனவே, கடந்த ஆண்டு திறக்கப்பட்ட நாளான ஆகஸ்ட் 2-இல் கூட அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடுவதற்கான வாய்ப்பு இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது. மேலும், கர்நாடக அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் நீர்திறப்பு குறைக்கப்பட்டிருப்பதால், இப்போதைக்கு மேட்டூர் அணை திறப்பதற்கான வாய்ப்பில்லை எனக் கருதப்படுகிறது.

## நெல்லுக்கு ஊக்கத்தொகை: முதல்வர் அறிவிப்புவிவசாய சங்கங்கள் வரவேற்பு

நிகழாண்டிலும் நெல்லுக்கு மாநில அரசின் ஊக்கத்தொகை தொடரும் என்ற தமிழக முதல்வரின் அறிவிப்புக்கு பல்வேறு விவசாய சங்கங்கள் வரவேற்பை தெரிவித்துள்ளன.

மத்திய அரசால் நிகழாண்டுக்கான கொள்முதல் விலை கடந்த 7-ம் தேதி அறிவிக்கப்பட்ட நிலையில், மாநில அரசுகள் ஊக்கத்தொகை வழங்கக்கூடாது என்ற அறிவிப்புக்கு விவசாயிகள் மத்தியில் கடுமையான எதிர்ப்பு உருவானது.

இந்த நிலையில், தமிழக சட்டப்பேரவையில் புதன்கிழமை கவன ஈர்ப்புத் தீ0ர்மானத்துக்குப் பதிலளித்து பேசிய முதல்வர் ஜெயலலிதா, தமிழகத்தில் நிகழாண்டிலும் நெல்லுக்கான மாநில அரசின் ஊக்கத் தொகை தொடரும் என்று அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

சாதாரண ரக நெல்லுக்கு ரூ.50-ம், சன்னரக நெல்லுக்கு ரூ.70-ம் ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்றும், இதன் மூலம் விவசாயிகள் ஒரு குவிண்டால் சாதாரணரக நெல்லுக்கு ரூ.1360-ம், சன்னரக நெல்லுக்கு ரூ.1400 -ம் பெறுவர்.

அரசின் அறிவிப்புக்கு பல்வேறு விவசாயிகள் வரவேற்பை தெரிவித்துள்ளன.

தமிழக விவசாயிகள் சங்க மாநிலச் செயலர் ராஜா சிதம்பரம்: மத்திய அரசின் அறிவிப்பால் விவசாயிகள் அச்சமடைந்த நிலையில், முதல்வர் அறிவித்துள்ள ஊக்கத்தொகை குறித்த அறிவிப்பு மகிழ்ச்சியை அளிக்கிறது.

நெல்,கோதுமை போன்று கரும்புóககான ஊக்கத்தொகையை வழங்குவதிலும் தமிழக முதல்வர் அறிவிப்பை வெளியிட வேண்டும். மத்திய அரசின் அறிவிப்பை பொருட்படுத்தாது விவசாயிகள் நலன்கருதி அளித்துள்ள தீர்ப்பாகவே கருதுகிறோம்.

தமிழக தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தியாளர்கள் சங்க மாநிலத் தலைவர் புலியூர் ஏ.நாகராஜன்:

அனைத்து விவசாயச் சங்கப் பிரதிநிதிகள், டெல்டா விவசாயச் சங்கங்களின் கோரிக்கையை ஏற்று, நெல்லுக்கு ஊக்கத்தொகையைத் தொடர்ந்து வழங்குவதாக அறிவித்துள்ள முதல்வருக்கு பாராட்டுகளைத் தெரிவிக்கிறோம்.

தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் பூ. விசுவநாதன்:

மத்திய அரசு அறிவிப்பு மாநில அரசைக் கட்டுப்படுத்தாது என்பதை உணர்த்தும் வகையில் முதல்வரின் அறிவிப்பு உள்ளது. விவசாயிகள் நலன்தான் முக்கியம் என்பதை உணர்த்தியுள்ள முதல்வருக்கு பாராட்டுகளை விவசாய சங்கங்கள் சார்பில் தெரிவித்து கொள்கிறோம் என்றார் அவர்.

## 3.30 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய இலக்கு

தஞ்சாவூர் கரந்தை மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்தில் ஆண்டுக்கு 3.30 கோடி மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர் என். சுப்பையன்.

தஞ்சாவூர் கரந்தையில் மீன் வளத் துறைக்குச் சொந்தமான தூண்டுதல் முறை மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்தில் அண்மையில் ஆய்வு மேற்கொண்ட அவர் பின்னர் தெரிவித்தது:

இந்த நிலையத்தில் ஆண்டுக்கு 3.30 கோடி மீன் குஞ்சுகள் தயார் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில், இதுவரை 2.17 கோடி மீன் குஞ்சுகள் தயார் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த மீன் குஞ்சுப் பொரிப்பகம் தஞ்சாவூர் மாவட்ட மீன் வளர்ப்பு விவசாயிகள் சங்கத்துக்காகக் கட்டப்பட்டு இயங்கி வருகிறது.

வெளி மாவட்ட விவசாயிகளும் மீன் குஞ்சுகளை பெற்றுச் செல்லலாம்.

1 லட்சம் மீன் குஞ்சுகள் வெளிச் சந்தையில் ரூ. 1,300 வரை விற்பனை செய்யப்படுகிறது. இந்த நிலையத்தில் ரூ. 888 என விவசாயிகளுக்குச் சலுகை விலையில் அளிக்கப்படுகிறது.

அரசு மீன் குஞ்சு நிலையத்தில் உள்ள சினை மீன்கள் தரமான முறையில் இருப்பில் வைக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகிறது.

மீன் குஞ்சு உற்பத்தி காலங்களில் அதாவது ஏப்ரல் முதல் அக்டோபர் வரை விவசாயிகள் பெற்றுச் செல்லலாம் என்றார் சுப்பையன்.

முன்னதாக, அவர் மீன் குஞ்சு உற்பத்தி செய்வதற்காகப் பராமரிக்கப்பட்டு வரும் சினை மீன்கள், நுண் மீன் குஞ்சி பொரிப்பகத்தில் மீன் முட்டைகள், நுண் மீன் குஞ்சுகள், கரந்தை தட்டான்குளத்தில் உள்ள மீன் வளத்துறைக்கு சொந்தமான மீன் குஞ்சு பொரிப்பகம் ஆகியவற்றை ஆய்வு செய்தார். அப்போது, மீன் வள ஆய்வாளர்கள் கதிரேசன், கொளஞ்சிநாதன், ரம்யா லெட்சுமி ஆகியோர் உடனிருந்தனர்.

## சென்னைக்கு 900 டன் நெல் அனுப்பிவைப்பு

நீடாமங்கலம் ரயில் நிலையத்திலிருந்து சரக்கு ரயில் மூலம் 900 டன் பொது ரக நெல் சி.ஆர். 1009 வடசென்னைக்கு அரைவைக்காக புதன்கிழமை அனுப்பிவைக்கப்பட்டது.

திருவாரூர் மாவட்டம், அசேஷத்தில் உள்ள திறந்தவெளி சேமிப்பு மையம் மற்றும் பாமணி மத்திய சேமிப்புக் கிடங்குகளிலிருந்து 900 டன் பொதுரக நெல் (சி.ஆர்.1009 ) 90 லாரிகளில் ஏற்றப்பட்டு புதன்கிழமை நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டது. பின்னர் சரக்கு ரயிலில் 21 பெட்டிகளில் ஏற்றப்பட்டு வடசென்னைக்கு நெல் அரைவைக்காக அனுப்பிவைக்கப்பட்டது. இத்தகவலை நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

## "பால் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை'

குமரி மாவட்டத்தில் பால் உற்பத்தியைப் பெருக்க ஆவின் நிர்வாகக்குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆவின் நிர்வாகக்குழு ஆலோசனைக் கூட்டம் நாகர்கோவிலில் புதன்கிழமை நடைபெற்றது. பால்வளத் தலைவர் எஸ்.ஏ.அசோகன் தலைமை வகித்தார். பொதுமேலாளர் லட்சுமணபிள்ளை, துணைத் தலைவர் வன்னியூர் பாபு, மண்டல இணை இயக்குநர் உமா மகேஸ்வரி மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

பால் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுப்பது, வாரம் இருமுறை கால்நடைகளுக்கு சிறப்பு முகாம் நடத்துவது, தட்டுப்பாடின்றி ஆவின்பால் விநியோகம் செய்வது, தேவையான இடங்களில் புதிய பாலகம் திறப்பது உள்ளிட்ட முடிவுகள் கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

## அணைகளில் குறைந்து வரும் நீர்மட்டம் அச்சத்தில் விவசாயிகள்; கரைசேருமா கன்னிப் பூ சாகுபடி?

குமரி மாவட்ட அணைகளில் நீர்மட்டம் குறைந்து வருவதால், மாவட்டத்தில் கன்னிப்பூ சாகுபடி கரைசேருமா என்ற அச்சம் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

மாவட்டத்தில் ஒருவாரமாக வறண்ட வானிலை காணப்படுகிறது. அவ்வப்போது மிதமான சாரல் மழை பெய்தாலும், அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் போதிய மழை இல்லை.

மாவட்டத்தில் நிகழ் பருவத்தில் 9 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகளின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து வருகிறது. புதன்கிழமை நிலவரப்படி பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 8.70 அடியாகும். அணைக்கு விநாடிக்கு 333 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து 372 கன அடி நீர் பாசனத்துக்கு வெளியேற்றப்பட்டு வருகிறது.

கடந்த வாரம் அணையிலிருந்து 650 கன அடி நீர் வெளியேற்றப்பட்ட நிலையில் இப்போது அது பாதியாக குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் பெருஞ்சாணி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது நிறுத்தப்பட்டது. அதற்கு பதிலாக சிற்றாறு-1 அணையிலிருந்து திறந்து விடப்பட்டது. தற்போது பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 36.45 அடியாக உள்ளது. அணைக்கு 75 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது.

இப்போது இருக்கும் நீரை பயன்படுத்தி நெற்பயிர்களை காப்பாற்ற முடியுமா என்ற சந்தேகம் விவசாயிகளிடையே எழுந்துள்ளது.

இதுகுறித்து தேசிய விவசாய சங்கத் தலைவர் மருங்கூர் ஏ. செல்லப்பன் கூறியது:

மாவட்டத்தில் பெரும்பாலும் அம்பை 16 ரக நெல் பயிரிடப்பட்டுள்ளது. புரட்டாசி மாதத்தில்தான் பயிர்கள் அறுவடைக்குத் தயாராகும். அதுவரை தண்ணீர் தேவைப்படும்.

இப்போது அணைகளில் உள்ள நீரை சிக்கனமாக திறந்து விட்டால் பயிர்களை முழுமையாக காப்பாற்றலாம். தோவாளை மற்றும் எம்.பி. கால்வாய்களில் சுழற்சி முறையில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இது சிக்கன நடவடிக்கைகளில் ஒன்றுதான். இருப்பினும் பொதுப்பணித் துறை அதிகாரிகள் அவ்வப்போது கால்வாய்களை பார்வையிட்டு தண்ணீர் முறையாக விநியோகிக்கப்படுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டும்.

சுழற்சி முறை அமல்படுத்தப்படுமானால் அந்தந்தப்பகுதி விவசாய சங்கப் பிரதிநிதிகளை அழைத்து அவர்களிடம் அதிகாரிகள் ஆலோசனை நடத்த வேண்டும் என்றார் அவர்.

இதுகுறித்து முன்னோடி விவசாயி ஒருவர் கூறுகையில், மாவட்டத்தில் தோவாளை, அகஸ்தீசுவரம் வட்டப்பகுதிகள் மற்றும் குருந்தங்கோடு ஒன்றியப் பகுதிகளில் முதல் பருவமான கன்னிப்பூ சாகுபடியில் நடவு செய்யப்பட்ட நெற்பயிர்கள் தற்போது பொதியும், கதிருமாக உள்ளன. வரும் ஆகஸ்ட் மாதம்வரை தண்ணீர் கிடைத்தால் மட்டுமே நெல் அறுவடை செய்யமுடியும்.

பொதுப்பணித் துறையினர் இருக்கும் நீரை சிக்கனமாகப் பயன்படுத்தும் வகையில் முறை வைத்து பாசனம் செய்வதுடன், தொடர்ந்து அனைத்துப் பகுதி விவசாயிகளுக்கும் தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்தால் மட்டுமே நெல் அறுவடை செய்யமுடியும். இல்லையெனில் பெரும்பாலான விவசாயிகளுக்கு ஏமாற்றமே ஏற்படும் என்றார்.

## இயற்கை விவசாய விழிப்புணர்வுப் பேரணி

விழுப்புரத்தை அடுத்த மயிலத்தில் இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வுப் பேரணி புதன்கிழமை நடைபெற்றது.

கலவை ஆதிபராசக்தி வேளாண் தோட்டக்கலை கல்லூரி, மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை, அறிவியல் கல்லூரி ஆகியவை சார்பில் இந்த விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

மயிலம் கல்லூரி வளாகத்தில் தொடங்கிய இப்பேரணிக்கு கல்லூரி முதல்வர் விஜயகாந்தி தலைமை வகித்தார்.

திண்டிவனம் போக்குவரத்து போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் நடராஜன், அட்வைஸ் நர்சிங் கல்லூரி நிர்வாகி கருணாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆதிபராசக்தி வேளாண்மை கல்லூரி மாணவர் கணேஷ் வரவேற்றார். மயிலம் ஆதீனம் 20ஆம் பட்டம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்.

உதவிப் பேராசிரியர்கள் சிவசுப்ரமணியன், குமார், விமலா, சுப்ரமணி ஆகியோர் இயற்கை விவசாயம் குறித்துப் பேசினர். இதில் வேளாண் கல்லூரி மாணவர்கள், தமிழ் கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்.

பேரணி நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று கல்லூரியை வந்தடைந்தது. இந் நிகழ்ச்சியில் சமூக ஆர்வலர் ரவி நன்றி கூறினார்.